திற்கு வந்திருக்கின்றன. அவற்றைப் பரிசீலனை செய்து கொண்டு இருக்கின்றோம். பரிசிலனை முடிந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு: கு. காமாட்சி: பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பிரசித்திபெற்ற சமயபுரம் ஸ்ரீ மாரியம்மன் தேஸ்தானம் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் தேவஸ்தானத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. இவற்றைப் பிரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே பேசப்படுவது திருப் பரங்குன்றத்திலுள்ள தேவஸ்தானத்தைப்பற்றியது.

வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப் பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கை அளித்தல்.

கதர், கிராமத் தொழில்கள்பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் பரிந் துரைகளின்மேல் அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான அறிக்கை.

THIRU K. VEZHAVENDAN : Mr. Speaker, Sir, I rise to present the Second Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Khadi and Village Industries.

3. 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்.

(ஆ) கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்.

(இ) கோரிக்கை எண் 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங் களுக்கான மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்,

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 52,12,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மாநிலத்தில் ஓடுவதற்கு அனுமதிக்கப்பட்ட ஓம்னிபஸ் போக்குவரத்தைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 52,12,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகின்றேன்.